**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.218 /2020**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜசேகர் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மாடசாமி | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | சின்னநாடானூர் | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 12.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :-**

நான் சின்னநாடானூரில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 09.05.2016ம் தேதி 18.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடத்தை காவல் உதவி ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், சாட்சி ராமர் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.19 13:38:25 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.218 /2020**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆரோக்கியமேரி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பால்ராஜ் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 12.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :-**

நான் தற்போது தென்காசி போக்குவரத்து காவல் பிரிவுல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது, கடந்த 09.05.2017 ம் தேதி, 14.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, மருத்துவமனை சென்று காந்திசெல்வின் என்பவர் எழுதி கொடுத்த மனுவை பெற்று 16.30 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.169/2017, சட்டப்பிரிவுகள் 147, 148, 109, 324, 506(2) இதசவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதீமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் உதவி ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

புகாரை என் முன்னிலையில் புகார்தாரர் எழுதினாரா என்றால் எழுதினார். புகார் 6 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதற்கு தனிப்பட்ட காரணம் இல்லை. சம்பவம் காலக்கட்டத்தில் குலசேகரப்பட்டி பாவூர்சத்திரம் காவல் நிலைய எல்கையிலும், குணராமநல்லூர் குற்றாலம் காவல் நிலைய எல்கையிலும் வரும் என்றால் சரிதான். புகார்தாரர் காவல் நிலைய அதிகாரிகளுக்கு பரிட்சையமான நபர் என்றால் எனக்கு தெரியாது.

நான் சொன்ன நாளில், நேரத்தில் புகார்தாரரிடமிருந்து எந்த புகார் மனுவும் பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. புகார் மனுவில் புகார் வாக்குமூலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதே தேதியில் புகார்தாரர் மீது பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் குற்ற எண்.168/2017 வழக்கு மாரியப்பன் என்பவர் கொடுத்த புகாரின் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.19 13:38:34 +0530